பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 06 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விளையாட்டுத்துறையில் இந்தியாவின் சாதனை தொடர்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமான **NCERT,** தனது புத்தகங்களை அனுமதியின்றி தயாரித்து விநியோகம் மற்றும் விற்பனையில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது.

3. மேகாலயா மாநிலத்துடனான பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்று அசாம் மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

4. ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி **Annalena Baerbock** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

5. இந்தோனேஷியா ஓபன் பேட்மிட்டன் போட்டி ஜகார்தாவில் இன்று தொடங்குகிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

விளையாட்டுத்துறையில் இந்தியாவின் சாதனை தொடர்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**Ulaan Baatar** ஓபன் மல்யுத்தப் போட்டியில் இந்தியா 6 தங்கம் உட்பட 21 பதக்கங்களை வென்றது, மல்யுத்த வீரர்களின் அற்புதமான செயல்பாட்டை காட்டுவதாகவும், இதற்காக அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

பதக்கங்களை வென்றவர்களில் வீராங்கனைகள் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும், இதுவரை இல்லாத சிறப்பான செயல்திறனை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நார்வே செஸ் போட்டியின் 6வது சுற்றில் முன்னணி வீரர் மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிரான ஆட்டத்தில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்த குகேஷ்-க்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த வெற்றியை குகேஷ் பெற்றுள்ளதாகவும், இது அவரது திறமையையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதாகவும் சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அவர் தொடர்ந்து வெற்றி பெறவும் பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவும் - அமெரிக்காவும் பரஸ்பரம் தங்களது வர்த்தகத்திற்கு சந்தைகளை அணுகுவதில் முன்னுரிமை வழங்குவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், பாரீசில் நேற்று செய்தியாளர்களிடம் பேசினார்.

ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

எஃகு மற்றும் அலுமினியம் மீதான வரிகளை 50 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தது குறித்து செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இந்தப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இருதரப்பு ரீதியாக பேச்சுகள் மூலம் தீர்வு காண இந்தியா விரும்புகிறது என்று கூறினார்.

முன்னதாக திரு. பியூஷ் கோயல் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பிரான்ஸ் நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்களின் உயரதிகாரிகளை சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமான **NCERT,** தனது புத்தகங்களை அனுமதியின்றி தயாரித்து வினியோகம் மற்றும் விற்பனையில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது.

போலியாக அச்சிடப்பட்ட **NCERT**-யின் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பிரதிகள், 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள அச்சு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடங்கு உரிமையாளர்கள் மற்றும் இந்தப் புத்தகங்களை விற்பனை செய்த சில்லரை விற்பனையாளர்கள் மீது காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

**NCERT** தயாரிக்கும் பாடப் புத்தகங்களை அனுமதி இல்லாமல் அச்சிடுவதை தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சகமும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மேகாலயா மாநிலத்துடனான பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்று அசாம் மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

இரு மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தொடர்பாக நேற்று கவுஹாத்தியில் உயர்மட்ட அளவிலான பேச்சுகள் நடைபெற்றது.

இதில் அசாம் மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா, மேகாலயா மாநில முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரு மாநிலங்களுக்கு இடையிலான எல்லைப் பிரச்சினை, வெள்ளக் காலங்களில் அதிகப்படியான தண்ணீரை திறந்துவிடுவதால் ஏற்படும் பிரச்சினை, இரு மாநிலங்களின் எல்லையில் நடைபெற்று வரும் பல்நோக்கு திட்டங்கள் ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பேசிய திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா, கடந்த காலத்தைப் போலவே இரு மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு பரஸ்பர ஒத்துழைப்பு அடிப்படையில் தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இரு மாநிலங்களின் எல்லையில் 5 இடங்களில் எல்லைத் தூண்களை நடுவதற்கும் இந்தக் கூட்டத்தில் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேகாலயாவில் இருந்து அதிகப்படியான தண்ணீர் திறந்துவிடப்படுவதால் கவுஹாத்தி நகரில் ஏற்கடும் செயற்கையான வெள்ளம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

இதில் இன்று இடம்பெறுகிறது ஹவில்தார் மேஜர் **Piru Singh** குறித்த வீரதீர சாதனைகள்...

<<<<>>>>

ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி **Annalena Baerbock** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஐ.நா. சபையில் நடைபெற்ற இதற்கான ரகசிய வாக்கெடுப்பில் மொத்தமுள்ள 193 வாக்குகளில் **Annalena** 167 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

மேலும் ஐரோப்பாவில் இருந்து இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தலைவராக உள்ள கேமரூன் நாட்டின் **Philemon Yang**-கின் பதவிக் காலம் வரும் செப்டம்பர் மாதத்துடன் முடிவடைய உள்ளது.

புதிய தலைவர் ஐ.நா.வின் 80வது ஆண்டு விழா உட்பட பொதுச் சபையின் முக்கியமான நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குவார்.

திருமதி **Annalena** ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாடுகளைக் கொண்டவர் என்பதால் அவரது வேட்புமனுவை அந்நாடு கடுமையாக எதிர்த்தது.

<<<<>>>>

பசுமைத் தொழில்நுட்பம், நகர்ப்புற மேம்பாடு ஆகியவற்றில் ஜப்பானின் **Kitakyushu** நகரத்துடன் தெலங்கானா மாநில அரசு இணைந்து செயல்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

நேற்று ஹைதராபாதில் இது தொடர்பாக இரு தரப்பினருக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, கரியமில வாயு உமிழ்வை முற்றிலுமாக கட்டுப்படுத்துதல், நகர்ப்புற புத்தாக்க முயற்சிகள் ஆகியவற்றில் இந்த ஒப்பதம் கவனம் செலுத்தும் என்று கூறினார்.

**Musi** நதி மேம்பாடு மற்றும் புத்துயிர் திட்டம், தெலங்கானா மாநில இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தெலங்கானா மாணவர்கள் ஜப்பான் மொழியை கற்றுக்கொள்ள பயிற்சி அளிக்கப்படும் என்றும், ஜப்பானில் உள்ள உயர்கல்வி வாய்ப்புகளை மாணவர்கள் அறிந்துகொள்ள ஏற்பாடுகள் செய்ப்படும் என்றும் திரு. ரேவந்த் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

தென்கொரியாவில் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது.

அந்நாட்டில் ராணுவ சட்டத்தை அமல்படுத்தியதால் ஏற்கனவே இருந்த அதிபர் திரு. **Yoon Suk Yeol** பதவிநீக்கம் செய்யப்பட்டதால், இந்தத் தேர்தல் நடைபெறுகிறது.

இன்றைய அதிபர் தேர்தலில் வெற்றி பெறுபவர் நாளை அதிபராக பதவியேற்பார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

தமிழகத்தில் தென் மாவட்ட பயணிகளின் வசதிக்காக வாரந்திர சிறப்பு ரயில்களின் இயக்கத்தை தெற்கு ரயில்வே மற்றும் தென் மத்திய ரயில்வே நீட்டித்துள்ளன.

தெலங்கானா மாநிலம் கச்சிகுடாவில் இருந்து வாரம்தோறும் திங்கட்கிழமை மதுரை வரை இயக்கப்படும் வாராந்திர சிறப்பு ரயில் வரும் 9ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 28ஆம் தேதி வரை வழக்கமான நேரத்தில் இயக்கப்படும்.

மறு மார்க்கத்தில் வரும் 11ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 30 தேதி வரை வாரம்தோறும் புதன்கிழமை மதுரையில் இருந்து கச்சிகுடாவிற்கு இந்த ரயில் இயக்கப்படும்.

இதேபோல் கச்சிகுடாவில் இருந்து வாரம்தோறும் வெள்ளிக்கிழமை மதுரை வழியாக நாகர்கோவில் வரை இயக்கப்படும் சிறப்பு ரயில், வரும் 13ஆம் தேதியில் இருந்து அடுத்த மாதம் 11ஆம் தேதி வரை தொடர்ந்து இயக்கப்பப்படும் என்றும் மறு மார்க்கத்தில் ஒவ்வொரு ஞாயிறன்றும் நாகர்கோவிலில் இருந்து வரும் 15ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 13ஆம் தேதி வரை இந்த ரயில் இயக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தோனேஷியா ஓபன் பேட்மிட்டன் போட்டி ஜகார்தாவில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியாவின் லக்ஷயா சென், பி.வி. சிந்து, ஹெச்.எஸ். பிரனாய் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

--------------

ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹிதேஷ் சௌஹான் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**